செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம்

31-12-2020 அன்று முற்பகல் 11.00 மணிக்கு

நடைபெற்றதன் கூட்ட நடவடிக்கைகள்

தலைமை : செல்வா. லெ. நித்தியா M.B.A, ஆணையர்

தனி அலுவலர் அவர்கள்

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சி ஆணையாளருக்கு எதிராக செங்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S NO 64/2020ன்படி திரு.செ.அப்துல்கரீம் த/பெ.செய்யது அப்துல் காதர், கதவு எண் 378 புது மனை தெரு வல்லம் என்பவர் தொடர்ந்த வழக்கில் செங்கோட்டை நகராட்சி சார்பாக நகர்மன்ற வழக்கறிஞர் திரு.ச.கிருஷ்ணமூர்த்தி வழக்கினை நடத்தி தரவும் அதற்கான செலவு தொகையினை மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள்

இந்திய அரசியலமைப்பு 74வது பிரிவு ஏ.ஜி முதன்மை தணிக்கை 2015–16 முதல் 2020–21 வரையிலான காலத்திற்குரிய விபரங்கள் 1 முதல் 60 படிவத்தில் கோரியது உரிய இணைப்புகளுடன் அனுப்பிட ஒளி நகல் எடுத்து புத்தக வடிவத்தில் மூன்று நகல்கள் வழங்கிட உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டு குறைவான விலை விதிதம் வழங்கிய சிவசங்கரி ஜெராக்ஸ் நிறுவனத்தின் விலை வீதம் அனுமதிக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டது அதற்கான செலவினம் ரூ.1800/– மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் உள்ள அனைத்து பகுதிகளிலும் மொத்தம் தெருவிளக்குகள் எண்ணிக்கை 900 ஆகும் மேற்காணும் தெருவிளக்குகளை பராமரிக்க போதுமான மின் பணியாளர்கள் இல்லாததால், பணியாளர் செலவினம் மற்றும் மின் சாதன கொள்முதல் செலவினங்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் 2021 ஆம் ஆண்டு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு தனியார் நிறுவனத்தின் மூலம் பராமரிக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ஒரு ஆண்டிற்கு பொதுப்பணித்துறை தரவிலைப்பட்டியல் 2020–21–ன் அடிப்படையில் ரூ.15.82 இலட்சத்திற்கு கருத்துரு தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ஒப்புதல் பெறவேண்டி தயார் செய்யப்பட்டுள்ள கருத்துருக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

அ) மேற்காணும் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் வாயிலாக மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதிப் பெற்று ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு பணியினை செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள கருத்துரு மதிப்பீட்டுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்

இ) மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.